**தலைப்பு 119 – மின் வலு மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன மின் சக்தி மற்றும் மீள் புதுப்பிக்கக்கூடிய வலு அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 119 – மின் வலு மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு

அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | |
| 127(1) (அ) சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் | 1. மிகை நிதிஏற்பாடு | 2.6 |
| | 2. கட்டுநிதி மதிப்பீட்டைத் தயாரிப்பதில் குறைபாடு | 2.7 |

| | | | |
|---|---|---|---|
| | கட்டளைகளுக்கு இணங்கிய வகையில் மட்டுமல்லாது அரசாங்க கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | | |
| 127(1) (ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. இணக்கமின்மைகள் | 2.8 |
| | | 2. மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.9 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் பலவீனம் | 2.4 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | | 2.8(i) |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் | நிதியுடன் தொடர்புபடுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்படாமை. | 2.10 |

கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொட்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும்.

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 07 பிரதான செயற்பாடுகள் காணப்பட்டதுடன் அமைச்சின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள 09 நியதிச்சட்ட நிறுவனங்களும் 07 வெளிநாட்டுச் செயற்திட்டங்களும் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அமைச்சின் தாபனக் கட்டமைப்பும் வருடாந்த கட்டுநிதித் திட்டமும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்த்த பிரதான நடவடிக்கைகள் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.1.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை.**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சு பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்ற வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு நிறைவேற்றப்படாததன் காரணமாக ரூபா 31.5 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

| | பிரதான செயற்பாடு | நிதி வழங்கும் நிறுவனம் | வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு |
|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் |
| i | துப்பரவான எரிசக்தி மற்றும் வலையமைப்பு செயற்திறனை மேம்படுத்தும் செயற்திட்டம் - இலங்கை நிலைபேறான வலு அதிகார சபை | ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அரசாங்கம் | 1 |
| ii | நவீன உயிரியல் எரிசக்தி தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தலும் உயிரியல் தாவர எரிசக்தியை மேம்படுத்தலும் | இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 15 |
| iii | இலங்கையின் எரிசக்தி உற்பத்தியின் போதும் பயன்பாட்டின் போதும் வெளியேறுகின்ற நச்சு வாயுவை குறைப்பதற்காக தேசியரீதியாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தலும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியும். | உலகளாவிய சுற்றாடல் நிதியம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 5 |
| iv | மின்சாரம் வழங்கும் நிலையங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் இலங்கை நிலைபேறான வலு அதிகார சபை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | ஆசிய அபிவிருத்தி வங்கி | 10.5 |
| | மொத்தம் | | 31.5 |

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய பீஎப்/402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை தயாரித்து கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆணடிற்கான செயலாற்றல் அறிக்கை 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

**செயற்திட்டங்களை உரிய திகதியில் ஆரம்பிக்காமை**

31 மெகா வாட் இயலளவை தேசிய மின்சார வலையமைப்பிற்குப் பெற்றுக்கொள்வதற்காக அமுல்படுத்தப்பட்ட மொரகொல்ல நீர் மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 03 ஆண்டுகள் கால தாமதத்தின் பின்னர் அதன் வேலை 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 16,780 மில்லியன் பணம் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 09 சதவீதமாகும். இச்செயற்திட்டத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் ஆரம்பிக்காமையின் காரணமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்காக ரூபா 28 மில்லியனுக்கு அண்மித்த பணம் (USD 177,931) தண்டப் பணமாகச் (Commitment Charges) செலுத்த வேண்டியிருந்தது.

### 2.3 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளல்.

**பெறுகைகளைத் திட்டமிடல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 5.45 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 1.3 மில்லியன் பயன்படுத்தப்படாது முழுமையாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.4 சொத்துகள் முகாமைத்துவம்

**(அ) எரிபொருள் நுகர்வைப் பரீட்சித்தல்**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து எரிபொருள் பரிசோதனைக்கும் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25000 கிலோ மீற்றர்கள் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் சம்பந்தப்பட்ட பிரதான திருத்தங்களின் பின்னர் ஆகிய காரணங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்பட

வேண்டிய போதிலும் அமைச்சு அதற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் வாகனங்கள் சம்பந்தமான பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அலுவலகத்தை பராமரிக்கும் செலவுகள்**

அமைச்சு வருடாந்தம் ரூபா 20,429,958 வாடகையின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட ஒரு கட்டிடத்தில் அலுவலகம் செயற்பட்டு வந்தது. வருடாந்த துப்பரவு செய்தல் கட்டணம் ரூபா 2,924,719 இனை உள்ளடக்கி முழு கட்டிடத்திற்குமான செலவு ரூபா 23,354,677 ஆக இருந்தது. அதற்கிணங்க தனிப்பட்ட ஒருவருக்காக அலுவலகத்தை செயற்படுத்தும் செலவு ரூபா 165,636 ஆக உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 2.5 முகாமைத்துவ பலவீனங்கள்

(i) அமைச்சில் பொருத்தப்பட்டுள்ள வாயு சீராக்கல் இயந்திரத்தை சேவிஸ் பண்ணுதல் மற்றும் திருத்தம் செய்தல் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை முறைப்படியான உடன்படிக்கை இல்லாது இலங்கை மின்சார சபையின் வாயு சீராக்கல் மற்றும் குளிர் காப்பு கிளையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக வருடாந்த பராமரிப்பு கட்டணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சினால் மின்சார சபைக்கு ரூபா 16 மில்லியன் செலுத்த வேண்டியுள்ளது என இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவதாணிக்கப்பட்டது. இச்செலவுகளை தீர்த்துவைப்பதற்கு 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மின் மானியை உள்நாட்டில் உற்பத்தி செய்து இலங்கையின் மின் சக்தி துறைக்கு அறிமுகப்படுத்துவதற்காக இலங்கை மின்சார சபையானது பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஒரு செயற்திட்டத்தை அமுல்படுத்தியிருந்தது. மீளாய்வாண்டின் போது அமைச்சினால் அதற்காக ரூபா 10.19 மில்லியன் தொகை இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தும் சபையினால் அதனை உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.6 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

2007 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டு காலத்தில் அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாகப் சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 2013 | மீண்டுவருபவை | 1,087 | 710 | 377 | 35 |
| | மூலதனம் | 27,463 | 20,671 | 6,792 | 25 |
| | **மொத்தம்** | **28,550** | **21,361** | **7,169** | **25** |
| 2014 | மீண்டுவருபவை | 184 | 180 | 4 | 2 |
| | மூலதனம் | 32,127 | 24,107 | 8,021 | 25 |
| | **மொத்தம்** | **32,311** | **24,287** | **8,025** | **25** |
| 2015 | மீண்டுவருபவை | 368 | 332 | 36 | 10 |
| | மூலதனம் | 8,867 | 7,578 | 1,290 | 15 |
| | **மொத்தம்** | **9,235** | **7,910** | **1,326** | **14** |
| 2016 | மீண்டுவருபவை | 509 | 477 | 32 | 14 |
| | மூலதனம் | 13,159 | 12,543 | 615 | 6 |
| | **மொத்தம்** | **13,668** | **13,020** | **647** | **5** |
| 2017 | மீண்டுவருபவை | 453 | 442 | 11 | 2 |
| | மூலதனம் | 8,763 | 8,140 | 623 | 7 |
| | **மொத்தம்** | **9,216** | **8,582** | **634** | **7** |

மீளாய்வாண்டு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அதிக நிதி ஏற்பாடு வழங்குதல்**

14 செலவு விடயங்களுக்காக ரூபா 802 மில்லியன் கூட்டு மொத்தமான அதிக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 228 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.7 கட்டுநிதிக் கணக்கு

(அ) அமைச்சின் கீழுள்ள 7002/0000/00/0038/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 22.18 மில்லியனாகும். இது அமைச்சு கட்டிடத்தின் வாடகை வைப்பாக உள்ளதுடன் உடன்படிக்கை காலம் முடிவடைகையில் தீர்த்து வைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மின்சார சபையின் மூலம் வரட்சிக் காலத்தின் போது எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரத்தை தோற்றுவிப்பதற்காக ஏப்ரல் மாதத்தின் போது வேண்டப்பட்ட ரூபா 3,000 மில்லியனுக்கான கட்டுநிதி அம்மாதத்தில் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தும் வருட இறுதியின் போது அதற்காக ரூபா 6,000 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க நிறுவனங்களில் சூரிய வலு சக்தி முறைமையைப் பொருத்துதல் மற்றும் செங்கிரிலா ஹோட்டல் செயற்திட்டத்திற்கு மின்சாரத்தை வழங்குவது தொடர்பில் இலங்கை மின்சார சபைக்கு தீர்த்துவைக்கப்பட வேண்டிய பணத்திற்காக வேண்டப்பட்ட ரூபா 475 மில்லியன் கட்டுநிதி மீளாய்வாண்டின் போதும் திறைசேரியால் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்ட உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த கட்டு நிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 12 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 223,963 மொத்த தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதியானது நடவடிக்கை பூர்த்தியடைந்து 01 மாதத்திலிருந்து 05 மாதங்கள் வரையான கால வீச்சுடைய தாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன.

## 2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

(அ) CA/1/17/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் திகதிய சனாதிபதி செயலகத்தின் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரின் மற்றும் பிரதி அமைச்சரின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படுகின்ற உச்ச அளவான உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் அமைச்சர் 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதியிலிருந்து 04 வாகனங்களைப் பயன்படுத்தியிருந்தார்.

(ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சருக்கான அங்கீகரிக்கப்பட்ட உச்ச அளவு பதவியணியினர் 15 ஆக இருந்த போதிலும் அமைச்சரின் மற்றும் பிரதி அமைச்சரின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக முறையே 06

உத்தியோகத்தர்கள் மற்றும் 02 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 7,226,299 பணம் மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு அமைச்சரின் நடமாடும் தொலைபேசிக்காக மாதாந்த உச்ச எல்லையினை மிகைத்து மீளாய்வாண்டின் போது ரூபா 97,130 மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

## 2.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி ஊதிபங்களுக்கான செலவு.**

அமைச்சின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சரினால் ஆளணி ஊதியத் தொகுதிக்காக ரூபா 78 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 0.74 மில்லியனாக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 17 | 13 | 04 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 72 | 49 | 23 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 46 | 41 | 05 |
| (v) | அமையம் / ஒப்பந்த | 02 | 01 | 01 |
| | **மொத்தம்** | **141** | **105** | **36** |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பதவியணியினரைப் பயிற்றுவித்தல்

2017 ஆம் ஆண்டில் எவ்வகையிலும் பயிற்சியைப் பெற்றிருக்காத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 42 ஆக இருந்ததுடன் அது மொத்த உள்ளபடியான பதவியணியினரில் 30 சதவீத அளவாகும். அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது பதவியணியினர்களைப் பயிற்றுவிப்பதற்காக ரூபா 2 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 0.774 மில்லியனான 39 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசாங்க தொழிக் கொள்கையை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 0.33 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அரசாங்க மொழிக் குழுவை நியமிப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

| | ஊழியர் வகை | எண்ணிக்கை | காலப்பகுதி | ஏனைய தரப்பினர் |
|---|---|---|---|---|
| (i) | கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் | 2 | 2015.05.18 இலிருந்து மற்றும் 2015.10.21 இலிருந்து | இலங்கை மின்சார சபை |
| (ii) | தட்டெழுத்தாளர் | 1 | 2015.11.27 இலிருந்து | இலங்கை மின்சார சபை |
| (iii) | பயிற்சி பெறும் கனிஷ்ட தொழில்நுட்ப உதவியாளர் | 1 | 2015.11.02இலிருந்து | இலங்கை மின்சார சபை |
| (iv) | சாரதி | 2 | 2017.02.06 இலிருந்து மற்றும் 2017.06.22 இலிருந்து | இலங்கை மத்திய வங்கி |
| (v) | சாரதி | 1 | 2015.11.23 இலிருந்து | நில அளவையாளர் திணைக்களம |
| (vi) | நில அளவை வெளிக்கள உதவியாளர் | 1 | 2016.04.01 இலிருந்து | நில அளவையாளர் திணைக்களம |
| | **மொத்தம்** | **8** | | |

மின்சக்தி மற்றும் மீள் புதுப்பிக்கக்கூடிய எரி சக்தி அமைச்சினால் ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் கௌரவ அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்காக அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றின் உத்தியோகத்தர் இணைத்துக்கொள்ளப்பட்டால் அவர் அந்நிறுவனத்தில் பெற்றுக்கொண்டிருந்த சம்பளம் இன்றி இணைத்துக்கொள்ளப்பட்ட பிரிவுக்குரிய சம்பளமே செலுத்தப்படுதல் வேண்டும். எனினும், அமைச்சிற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட வெளி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் சேவையாற்றிய நிறுவனத்தில் பெற்றுக்கொண்டிருந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இலங்கை மின்சார சபையின் 07 ஊழியர்களுக்காக மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒரு சராதிக்காக சம்பளம் முறையே ரூபா 7,037,271 மற்றும் ரூபா 1,437,940 தொகைகள் இலங்கை மின்சார சபையால் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் நில அளவையாளர் திணைக்களத்தின்

உத்தியோகத்தருக்காக ரூபா 384,120 சம்பளமும் இலங்கை மத்தி வங்கியின் சாரதிக்காக திசெம்பர் மாத சம்பளமாகிய ரூபா 167,392 தொகையும் அமைச்சின் நிதி ஏற்பாட்டிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**2.10 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு**

---

நிதிப்பிரமாணம் 880 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.